# தொல்காப்பிய மன்றம் - கனடா

தொல்காப்பியவழி தொன்மைத் தமிழர்
வரலாறும் பண்பாடும் அறிவோம்
2020

## தமிழ்த்திறன் போட்டி

## பிரிவு : 7

## 2009இல் பிறந்தோர்

# தொல்காப்பிய மன்றம் - கனடா

## முன்னுரை

தமிழின் முதன்மையைப் பறைசாற்றி நிற்கின்றது தொல்காப்பியம். தொன்மை சான்ற நூலை எமக்குத் தந்தருளியவர் தொல்காப்பியர். தொல்காப்பியமே தமிழரின் மொழியின் ஆளுமையையும், ஆளுகையையும் வெளிப்படுத்தும் தொன்மத்தின் கூறாக அமைந்துள்ளது. தொன்மை சான்ற இலக்கிய மரபினை உலகிற்கு எடுத்துக்காட்டி தமிழின் பெருமையையும் அதன் வழி தமிழரின் பாரம்பரியத்தையம், பண்பாட்டையும் எடுத்தியம்பும் பழம்பெரும் பொக்கிசமாக எமக்குக் கிடைத்துள்ளது. தொல்காப்பியம் காலப் பழமையும் கருத்தின் ஆழமும் கொண்ட மிகச்சிறந்த கலைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. “கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்குறுகத் தறித்த குறள்” தமிழனது அறநெறியைப் புகட்டுவது போன்று தொல்காப்பியமும் அரும்பெரும் மொழிப் பெட்டகமாகத் திகழ்வது கண்கூடு. சொற்செறிவு, பொருட்செறிவு பொதிந்த தொல்காப்பிய பனுவலை பனம்பாரணர், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், கல்லாடனார், சேனாவரையர், தெய்வச்சிலையார், பேராசிரியர் போன்றோர் நன்கு கற்றுணர்ந்து உரை தந்துள்ளனர். அத்தோடு தொல்காப்பியத்தின் தொன்மை பற்றி மறைமலையடிகள், வெள்ளைவாரணனார், சோமசுந்தர பாரதியார், வையாபுரிப்பிள்ளை, சீனிவாசக ஐயங்கார், நீலகண்ட சாஸ்திரிகள் போன்றோர் ஆய்ந்து எழுதியுள்ளமை அதன் சிறப்பை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

தோண்டத்தோண்ட ஊறிவரும் மணற்கேணி போன்று கற்கக் கற்கக் குறை வில்லாத் தெளிவைத் தந்து வியப்பில் ஆழ்த்துகின்றது தொல்காப்பியம். தமிழின் தொன்மைச்சான்று நூலான தொல்காப்பியத்தின் காலம் ஆய்வுகளின் காரணமாக அதன் ஆழ அகலத்தை மென்மேலும் ஆழங்காண வேண்டும் என்னும் உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. உலகிற் தோன்றிய பழம் பெரும் நாகரிகங்களில் தமிழர் நாகரிகம் ஒன்று என்பதனை எடுத்துக்காட்டுவதற்கு மட்டுமன்றி தமிழைச் செம்மொழியாக்குவதற்கான அடிப்படை இலக்கண நூலாகவும் இது விளங்கு கின்றது.

“ஓர் இனத்தை வீழ்த்த வேண்டுமானால் அவர்தம் மொழியை வீழ்த்த வேண்டும்” என்னும் எண்ணப்பாங்கிற்கேற்ப, உலக வரலாற்றில் பல்வேறு எழுச்சியுற்ற காலங்களில் சில இனங்களைச் சிதைத்தும் அழித்தும் வந்துள்ளன. உலகில் தோன்றிய மொழிகளில் பெருந் தொகையானவை அழிந்து போயுள்ளன.

# தொல்காப்பிய மன்றம் - கனடா

இதற்கு வேற்று இனங்களின் தாக்கம், ஆக்கிரமிப்பு, எழுச்சி என்பன காரணிகளாக அமைந்துள்ளன. ஒரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு ஒன்று மொழி, மற்றது மதம் என்பவை முக்கிய கருவிகளாக உலக வரலாற்றில் அமைந்துள்ளன. அதற்கு எமது தமிழினமும் விதிவிலக்கல்ல. அன்னிய ஆக்கிரமிப்பு, இயற்கையின் சீற்றம் போன்றன வரலாற்றுக் காலந்தொட்டே இடம் பெற்று வந்துள்ளன.

இன்று நாம் தமிழர் என்று கூறிக்கொண்டு தமிழ் தெரியாமல் வாழும் நிலை ஏற்பட்டு வருகின்றது. புலம்பெயர்ந்த மண்ணில் மட்டுமன்றித் தாயகத்திலும் இன்று தமிழில் பேச வெட்கப்படும் நிலைமையினைக் காண்கின்றோம். வேற்று மொழிகளைப் பேசுவது பெருமை என நினைக்கின்றோம். தமிழ் உணர்வே இன்றி வாழ்ந்து வருகின்றோம். தமிழை வெறும் வயிற்றை நிரப்புவதற்காக மட்டும் பயன்படுத்தும் நிலைமாறி, இது எங்கள் தாய்மொழி, எமது உணர்வோடு ஒட்டிய மொழி என்னும் உண்மை உணர்வோடு செயற்பட எம்மை ஊக்குவிப்பதற்கான தொன்மை சார்ந்த நூல் ஒன்று உளது என்றால் அது தொல்காப்பியம் தான் என்று துணிந்து கூறமுடியும்.

கனடாவில் வாழும் தமிழ் மொழி கற்கும் மாணாக்கர் இலகுவாகத் தொல்காப்பியம் கூறும் செய்திகளையும் அதனோடு ஒத்த தமிழின் செழுந்தன்மையையும், வரலாற்றையும் தெரிந்து கொள்ளும் நோக்கத்தோடு அறிமுகப் படுத்தப்படுவதே மாணவர்களுக்கான இந்தத் தேர்வு வினாக்கொத்து. பெற்றோர் இலகுவாகத் தம்பிள்ளைகளுக்கு எமது பண்பாடு, விழுமியம், மொழி பற்றிய அறிவினை வாழைப்பழத்தில் ஊசி செலுத்துவது போன்று அவர்கள் உள்ளத்தில் ஏற்றிவிட உதவுவதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே இவற்றை அக்கறையோடு பிள்ளைகள் கற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என வேண்டுகின்றோம்.

**தொல்காப்பிய மன்றம் - கனடா**

# தொல்காப்பிய மன்றப் பாடல்

## வாழியவே!

ஒல்காப் புகழ்கொண்ட புலவரவர் - தமிழ்
உலகம் போற்றிடும் அறிஞரவர்
தொல்காப் பியன்புகழ் பாடிவரும் - கனடா
தொல்காப் பியமன்றம் வாழியவே!

கனடா மண்ணில் கிளையமைத்தோம் - தமிழ்
கற்றவர் ஏற்றிடப் பணிபுரிவோம்!
மனதாய்த் தமிழர் வாழ்வியலை – தமிழ்
மாணவர் கற்றிட வழிசமைப்போம்!!

கற்றதை மற்றவர் அறிந்திடவே – எங்கள்
கனடாக் கிளைவழி செய்துதரும்
பற்றுடன் நாம்செய்யும் தொண்டுகளால் - இந்தப்
பாரினிற் தமிழ்மொழி வீறுபெறும்!

பண்டைத் தமிழரின் வாழ்வுதனை – நன்கு
படம்பிடித் தழகாய்த் தந்தவரே!
மண்டலம் உன்பணி போற்றுதையா! - இந்த
மாநிலத் தமிழினம் வாழ்த்துதையா!!

எழுத்து சொல்பொருள் எனவகுத்து – தமிழ்
இலக்கணம் செய்து தந்தவனாம்
பழுத்த முதுபெருஞ் சான்றோனாம் – தொல்
காப்பிய னார்புகழ் வாழியவே!

ஒன்பது இயல்களிற் தமிழரது – வாழ்வின்
உண்மைகள் யாவையும் பொதியவைத்து
மன்பதை போற்றிடும் நூலாக – ஆக்கி
வழங்கிய ஆசான் வாழியவே!

சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

## கனடா தொல்காப்பிய மன்றத்தின் செயலவை உறுப்பினர்

1. திரு. சபா. அருள்சுப்பிரமணியம்
   (தலைவர்)
2. திரு. வ.சுகந்தன்
   (செயலாளர்)
3. திரு. பா.யாழ்கோவன்
   (பொருளாளர்)
4. திருமதி. லீலா சிவானந்தன்
   (துணைத் தலைவர்)
5. திரு. சி.சண்முகராஜா
   (துணைச் செயலாளர்)
6. திரு. த.சிவபாலு
7. திரு. க.குமரகுரு
8. செல்வி. பொ.குமுதினி
9. திருமதி. வாசுகி நகுலராஜா
10. திரு. கனக மனோகரன்
11. திரு. ச.இராஜேஸ்வரன்

# பலகார வகை



வடை



முறுக்கு



அரியதரம்



பகோடா



மோதகம்



கொழுக்கட்டை




வாய்ப்பன்



பணியாரம்

# உடல் உறுப்புகள்

| | |
|---|---|
| <br>கண்ணிமை | <br>அண்ணம் |
| <br>நாக்கு | <br>தோள்மூட்டு |
| <br>கழுத்து | <br>மணிக்கட்டு |
| <br>முழங்கால் | <br>பாதம் |

# பூக்கள்


மல்லிகைப்பூ


சாமந்திப்பூ


கனகாம்பரப்பூ


செவ்வரத்தம்பூ


தாமரைப்பூ


சூரியகாந்திப்பூ


றோசாப்பூ


வாழைப்பூ


# எண்கள்

| | |
|---|---|
| **91**<br>தொண்ணூற்றொன்று | **92**<br>தொண்ணூற்றிரண்டு |
| **93**<br>தொண்ணூற்றிமூன்று | **94**<br>தொண்ணூற்றினான்கு |
| **95**<br>தொண்ணூற்றைந்து | **96**<br>தொண்ணூற்றாறு |
| **98**<br>தொண்ணூற்றெட்டு | **99**<br>தொண்ணூற்றொன்பது |

# பெரியார்கள்




தொல்காப்பியர்



வள்ளுவர்



வீரமாமுனிவர்



அறிஞர் அண்ணா



மு.வரதராசன்



தனிநாயகம் அடிகளார்



நாவலர்



பாரதியார்

# பறவைகள்



வாத்து



கிளி



வான்கோழி



பருந்து



மரங்கொத்தி



செண்பகம்



கழுகு




ஆந்தை

# மிருகம்




கரும்புலி



வரிக்குதிரை



குதிரை



கழுதை



புலி



சிங்கம்



எருமை



சிறுத்தை

# உந்துவகை



சிற்றுந்து



பேருந்து



மிதியுந்து



தொடருந்து



விண்ணுந்து



நீர்மூழ்கி



பாரவூர்தி



முச்சக்கரவண்டி

# காய்கள்



நாரத்தங்காய்



வாழைக்காய்



பலாக்காய்



பூசணிக்காய்



அன்னமுன்னாக்காய்



நெல்லிக்காய்





விளாங்காய்



சுரைக்காய்

# கிழங்கு வகை

| | |
|---|---|
| <br>உருளைக்கிழங்கு | <br>மரவள்ளிக்கிழங்கு |
| <br>இராசவள்ளிக்கிழங்கு | <br>இஞ்சி |
| <br>வற்றாளங்கிழங்கு | <br>கரணைக்கிழங்கு |
| <br>பனங்கிழங்கு | <br>முள்ளங்கி |

# வீட்டுப் பொருட்கள்



வானொலிப்பெட்டி




தொலைக்காட்சிப்பெட்டி



கணினி



தாச்சி



மின்னடுப்பு



குளிர்சாதனப்பெட்டி



தொலைபேசி




மணிக்கூடு

# பாவனைப் பொருட்கள்



அம்மி



ஆட்டுக்கல்



பிட்டு உலை



சுளகு



இடியப்ப உரல்



திரிகை



சூட்டுஅடுப்பு



திருகணை

# பூச்சி வகை



இலையான்



ஈசல்



கரப்பான் பூச்சி



கறையான்



சிலந்தி



குளவி



மூட்டைப்பூச்சி



புலிமயிர்ச்சிலந்தி


# கடல் வாழ்வன



மீன்



நண்டு



சுறா



இறால்




கடலட்டை



சங்கு



கணவாய்



திமிங்கிலம்

# தாயகப் பறவைகள்



குயில்



வல்லூறு



காகம்





கௌதாரி



புறா



செண்பகம்



கழுகு



மைனா

# பழங்கள்



கொய்யாப்பழம்



புளியம்பழம்



எலுமிச்சம்பழம்



பப்பாசிப்பழம்



வாழைப்பழம்



பேரீச்சம்பழம்



முலாம்பழம்



பனம்பழம்

# மரங்கள்



பனை



தென்னை



முருங்கை



கமுகு



அரசமரம்



வேம்பு



ஆலமரம்



மேப்பிள்


# மங்கலப் பொருட்கள்



கும்பம்



தேங்காய்



மாவிலை



குத்துவிளக்கு



பன்னீர்ச்செம்பு



சந்தனம்



வாழையிலை



குங்குமம்

# காய்கறிகள்



பாகற்காய்



புடலங்காய்(புடோல்)



நீத்துப்பூசணிக்காய்



கெக்கரிக்காய்



வெண்டிக்காய்



அவரைக்காய்



போஞ்சிக்காய்



சுரைக்காய்

# ஊர்வன



பாம்பு



உடும்பு




அழுங்கு



கீரி (நகுலம்)



பச்சோந்தி



முதலை



அட்டை



மட்டத்தேள்

# கொடிகள்



கனடா




இலங்கை




அமெரிக்கா




இந்தியா



பிரித்தானியா



பிரான்ஸ்



சுவிஸ்



ஜேர்மனி

# ஆடை வகைகள்

| | |
|---|---|
|  காற்சட்டை |  மேற்சட்டை |
|  உள்ளாடை |  துண்டுத்தாவணி |
|  சேலை |  சால்வை |
|  வேட்டி |  தலைப்பாகை |

# தொல்காப்பிய மன்றம் - கனடா

## பிரிவு 7 வினா - விடைகள்

1. **தமிழ் மொழியில் உள்ள முதல் எழுத்தின் வகைகள் எவை?** உயிர் எழுத்து, மெய் எழுத்து

2. **உயிர் எழுத்துடனோ மெய் எழுத்துடனோ சேராத எழுத்து எது?** ஆய்த எழுத்து

3. **தமிழ் மெய் எழுத்துக்களில் வரும் இரண்டு இன எழுத்துக்களைக் கூறுக:** க்-ங், ச்-ஞ், ட்-ண், த்-ந், ப்-ம், ற்-ன்

4. **வினா எழுத்துகள் எவை?** எ, யா, ஆ, ஓ, ஏ

5. **மொழிக்கு முதலில் மட்டும் வரும் வினா எழுத்துக்கள் எவை?** எ, யா

6. **மொழிக்கு இறுதியில் மட்டும் வரும் வினா எழுத்துக்கள் எவை?** ஆ, ஓ

7. **மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து எது?** ஏ

8. **சுட்டு எழுத்துகள் எவை?** அ, இ, உ

9. **ஏவல் வாக்கியமாகப் பயன்படுத்தப்படக்கூடிய எழுத்துக்கள் எவை?** போ, வா, தா

10. **நான் + ஐ என்பதைச் சேர்த்து எழுதினால் வரும் சொல் யாது?** என்னை

11. **நீ + ஆல் என்பதைச் சேர்த்து எழுதினால் வரும் சொல் யாது?** உன்னால்

12. **நீங்கள் + ஐ என்பதைச் சேர்த்து எழுதினால் வரும் சொல் யாது?** உங்களை

13. **நாங்கள் + கு என்பதைச் சேர்த்து எழுதினால் வரும் சொல் யாது?** எங்களுக்கு

14. **நீ + ஒடு என்பதைச் சேர்த்து எழுதினால் வரும் சொல் யாது?** உன்னொடு

15. **மெய் எழுத்துக்களின் ஒலி அளபு எவ்வளவு?**
அரை மாத்திரை

16. **ஓர் எழுத்து தனித்து எத்தனை மாத்திரைகளில் ஒலிப்பது இல்லை?** மூன்று

17. **தமிழ் இலக்கணத்தில் உள்ள வேற்றுமை உருபுகள் எத்தனை?** எட்டு

18. **எழுவாய் வேற்றுமை எத்தனையாவது வேற்றுமை உருபு?**
முதலாம் வேற்றுமை

19. **செயற்படுபொருள் எத்தனையாவது வேற்றுமை?**
இரண்டாம் வேற்றுமை

20. **தமிழில் உள்ள சொற்களின் வகைகள் எவை?** (நான்கு)
பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்

21. **தமிழில் காலத்தைக் காட்டும் சொற்கள் எவை?**
வினைச் சொற்கள்

22. **பெயர்ச் சொற்கள் எத்தனை வகைப்படும்?**
ஆறு: பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்

23. **மாவீரன் என்பதில் உள்ள "மா" எவ்வகைச் சொல்?**
உரிச்சொல்

24. **சொல்லின் இறுதியில் நிற்கும் பகுதியை எவ்விதம் அழைப்பர்?** விகுதி

25. **விகுதியைக் கொண்டு எவற்றினை அறியமுடியும்?**
திணை, பால், எண், இடம்

26. **உயர் திணையின் பாற்பகுப்புக்கள் எவை?**
ஆண்பால், பெண்பால், பலர்பால்

27. **அஃறிணையில் உள்ள பாற்பகுப்பு எவை?**
ஒன்றன்பால், பலவின்பால்

28. **உயர் திணை இருபாற் பொதுப் பெயருக்கு ஓர் உதாரணம் தருக:** தலைவர், மேதை, குற்றவாளி

29. **முத்தமிழ் என அழைக்கப்படுபவை எவை?**
இயல், இசை, நாடகம்

30. **பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தை எழுதியவர் யார்?** தொல்காப்பியர்

31. **தொல்காப்பியத்தின் அதிகாரப் பிரிவுகள் எவை?**
எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்

32. **தொல்காப்பியத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் எத்தனை இயல்கள் உள்ளன?** ஒன்பது (9)

33. **தொல்காப்பியத்தில் எத்தனை நூற்பாக்கள் உள்ளன?**
1602

34. **தொல்காப்பியம் எந்த மன்னன் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது?** பாண்டிய மன்னன்

35. **தமிழுக்கு கதி எனக் கூறப்படும் நூல்கள் எவை?**
க – கம்பராமாயணம், தி – திருக்குறள்

36. **பொய்யா மொழி அல்லது முப்பால் என அழைக்கப்படும் நூல் எது?** திருக்குறள்

37. **திருக்குறளின் முப்பெரும் பிரிவுகள் எவை?**
அறம், பொருள், இன்பம்

38. **திருக்குறளில் மொத்தமாக எத்தனை குறட்பாக்கள் உள்ளன?** 1330

39. **திருக்குறளில் பயன்படுத்தப்படாத இரு சொற்கள் எவை?**
தமிழ், கடவுள்

40. **ஔவையார் இயற்றிய நூல்கள் எவை?**
ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி

41. **தமிழிலுள்ள ஐம்பெரும் காப்பியங்கள் எவை?**
சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி

42. **ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?** இளங்கோ அடிகளார்

43. **ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணியை இயற்றியவர் யார்?** திருத்தக்கதேவர்

44. **பூம்புகார் எந்த நாட்டின் தலைநகரமாக விளங்கியது?** சோழநாடு

45. **வஞ்சி எந்த நாட்டின் தலைநகரமாக விளங்கியது?** சேரநாடு

46. **மதுரை எந்த நாட்டின் தலைநகரமாக விளங்கியது?** பாண்டியநாடு

47. **சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் கொடிகளின் இலச்சினைகள் எவை?** சேரர் - வில், சோழர் - புலி, பாண்டியர் - மீன்

48. **மூவேந்தர் என அழைக்கப்படுவோர் யாவர்?** சேரர், சோழர், பாண்டியர்

49. **வன்னியர்கள் எந்த அரசன் காலத்தில் இலங்கையில் குடியேறினர்?** சோழர் ஆட்சிக் காலத்தில்

50. **நன்னூல் என்னும் நூலை எழுதியவர் யார்?** பவணந்தி முனிவர்

51. **திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தவர் யார்?** "ஜோசேப் பெஸ்கி"

52. **இத்தாலியரான "ஜோசேப் பெஸ்கி" தனக்கு வைத்துக்கொண்ட தமிழ்ப் பெயர் என்ன?** வீரமாமுனிவர்

53. **திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகிய நூல்களை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?** ஜி. யு. போப்

54. **தான் இறந்தபின் தன் சமாதியில் 'A Student of Tamil Literature' என எழுதிவைக்கச் சொன்னவர் யார்?** ஜி. யு. போப்

55. **தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?** மறைமலை அடிகளார்

56. **‘கப்பலோட்டிய தமிழன்’ என அழைக்கப்பட்டவர் யார்?**
வ. உ. சிதம்பரனார்

57. **“யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” எனத் தொடங்கும் பாடலைக் பாடியவர் யார்?** சுப்பிரமணிய பாரதியார்

58. **ஈழத்திலும் தமிழகத்திலும் பாடசாலைகளை நிறுவி தமிழ் வளர்த்த ஈழத்தவர் யார்?** ஆறுமுக நாவலர்

59. **தமிழர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டு அவரின் பெயரில் இயங்கிவரும் தமிழ்ப் பல்கலைக்கழகம் எது?**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

60. **உலகின் முதலாவது தமிழ்ப் பேராசிரியர் என அழைக்கப்படுபவர் யார்?** சுவாமி விபுலாநந்தர்

61. **“யாழ்ப்பாண வைபவ மாலை” என்னும் நூல் யாரால் எழுதப்பட்டது?** விபுலானந்த அடிகளார்

62. **சுவாமி விபுலாநந்தர் தமிழ் பேராசிரியராகக் கடமையாற்றிய பல்கலைக் கழகங்கள் எவை?** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக் கழகம்

63. **“புரட்சிக் கவிஞர்” என அழைக்கப்படுபவர் யார்?**
பாரதிதாசன் (சுப்புரத்தினம்)

64. **“யாதும் ஊரே யாவரும் கேளிர்” எனப் பாடியவர் யார்?**
கணியன் பூங்குன்றனார்

65. **“வாழ்க நிரந்தரம் வாழிய தமிழ் மொழி” எனத்தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?** சுப்பிரமணிய பாரதியார்

66. **மகாகவி என அழைக்கப்படும் ஈழத்துக் கவிஞர் யார்?**
மகாகவி உருத்திரமூர்த்தி

67. **புறநானூறு எக்காலத்தில் தோன்றிய இலக்கியம்?**
சங்க காலம்

68. **முச்சங்கங்கள் எவை?**
முதல்ச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம்

69. **இலங்கையர்கோன் என அழைக்கப்படும் மன்னன் யார்?** இராவணன்

70. **இலங்கையர்கோன் இராவணனின் கொடியின் சின்னம் என்ன?** வீணை

71. **இலங்கையின் பூர்வீகக் குடிகள் யாவர்?** இயக்கர், நாகர்

72. **அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கை முழுவதையும் ஆண்ட தமிழ் மன்னன் யார்?** எல்லாளன்

73. **இலங்கையில் முதன்முதலில் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை எது?** உதயதாரகை

74. **முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை ஒழுங்கமைத்த ஈழத்தவர் யார்?** தனிநாயகம் அடிகளார்

75. **இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு எங்கே நடைபெற்றது?** தரமணி, சென்னை

76. **நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு எங்கே நடைபெற்றது?** யாழ்ப்பாணம்

77. **"ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை" என்னும் பாடலைப் பாடியவர் யார்?** நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

78. **ஐம்பொறிகள் என அழைக்கப்படுபவை யாவை?** மெய், வாய், கண், மூக்கு, செவி

79. **ஐம்புலங்கள் என அழைக்கப்படுபவை யாவை?** சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

80. **ஐம்பெரும் பூதங்கள் எனப்படுபவை எவை?** நிலம், நீர், தீ, காற்று, வானம்

81. **ஐவகை நிலங்கள் எவை?** குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்

82. **ஆறு சுவைகள் எவை?** கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு

83. **குருதி என்பதன் ஒத்த சொல் யாது?** இரத்தம்

84. **நண்பன் என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:**
தோழன், பாங்கன்

85. **சாப்பாடு என்பதற்கான ஒத்த சொல் ஒன்று தருக:**
உணவு, ஊண், அமுது

86. **அரசன் என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:**
மன்னன், கோன், வேந்தன்

87. **குதிரை என்பதற்கான ஒத்த சொல் ஒன்று தருக:**
பரி, மா, புரவி

88. **புல்வாய் என்னும் விலங்கின் மறுபெயர் என்ன?** மான்

89. **மாதம் என்பதன் ஒத்த சொல் எது?** திங்கள்

90. **கிளவி என்பதற்கான ஒத்த சொல் ஒன்று தருக:**
மொழி, சொல், பதம்

91. **குரு என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:** ஆசிரியர்

92. **உழவன் என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:**
விவசாயி, கமக்காரன்

93. **மச்சம் என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:**
கடலுணவு, வராகம்

94. **மாமிசம் என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:**
இறைச்சி, ஊன்

95. **வளி என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:**
காற்று, வாயு

96. **குதிரை, பெரிது என்னும் இரு பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல் எது?** மா

97. **யானையின் கொம்பு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?**
தந்தம்

98. **எழினி, எழிலி ஆகிய சொற்களின் பொருள்களுக்கு இடையில் உள்ள வேறுபாடு யாது?**
எழினி என்பது மூடுதிரை அல்லது போர்வை ஆகும். எழிலி என்பது மேகம் அல்லது முகில் என்று பொருள்படும்.

99. **தமிழன் என்பதன் பெண்பால் சொல் என்ன?** தமிழிச்சி

100. **உழவன் என்பதன் பெண்பால் சொல் யாது?** உழத்தி

101. **தோழி என்பதன் எதிர்ப்பால் சொல் யாது?** தோழன்

102. **சேவகி என்பதன் எதிர்ப்பால் சொல் யாது?** சேவகன்

103. **தலைவன் என்பதன் எதிர்ப்பால் சொல் யாது?** தலைவி

104. **சேவல் என்பதன் எதிர்ப்பால் சொல் யாது?** பேடு

105. **மறி என்பதன் எதிர்ப்பால் சொல் யாது?** கடா

106. **கடுவன் என்பதன் எதிர்ப்பால் சொல் யாது?**
பெட்டை, பேடை

107. **பெரியோர் என்பதன் எதிர்ச் சொல் யாது?** சிறியோர்

108. **விருப்பு என்பதற்கான எதிர்ச் சொல் எது?** வெறுப்பு

109. **ஒற்றுமை என்பதன் எதிர்ச் சொல் யாது?** வேற்றுமை

110. **தண்ணீர் என்பதன் எதிர்ச் சொல் யாது?** வெந்நீர்

111. **ஊக்கம் என்பதன் எதிர்ச் சொல் யாது?** சோம்பல்

112. **ஆக்கம் என்பதன் எதிர்ச் சொல் யாது?** அழிவு

113. **வாழ்வு என்பதன் எதிர்ச் சொல் யாது?** தாழ்வு, சாவு

114. **ஆந்தை, கழுகு என்பன எழுப்பும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?** அலறுதல்

115. **யானை எழுப்பும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?**
பிளிறுதல்

116. **நரி, ஓநாய் என்பன எழுப்பும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?** ஊளையிடுதல்

117. **கரடி எழுப்பும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?**
உறுமுதல்

118. **சேவல், குயில் என்பன எழுப்பும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?** கூவுதல்

119. **குதிரை எழுப்பும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?** கனைத்தல்

120. **திரிகடுகம் எனப்படும் மருந்து எம்மூலிகைகளைக் கொண்டுள்ளது?** சுக்கு, மிளகு, திப்பிலி

121. **மங்கல வாத்திய வகையைச் சேர்ந்த இசைக்கருவிகள் எவை?** தவில், நாதசுரம்

122. **பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திரன் அல்லது பூமிக்கும் சந்திரனுக்கும் இடையில் சூரியன் வருவது எவ்வாறு அழைக்கப்படுகின்றது?** கிரகணம்

123. **தாய்லாந்து நாட்டில் திருமணத்தின்போது பாடப்படும் தமிழ்ப்பாடல் எது?** திருவாசகம்

124. **தேவாரங்கள் மூலம் தமிழில் பாடி இறைவழிபாடு செய்த திருஞானசம்பந்தரின் முதற்தேவாரமான "தோடுடையு செவியன்" என்ன பண்ணில் அமைந்துள்ளது?**
நட்டபாடை (இப்போதைய கம்பீரநாட்டை ராகம்)

125. **இன்றைய இசையில் உள்ள ஏழு சுரங்களினதும் தமிழ்ப் பெயர்கள் என்ன?**
குரல் - சட்ஜம்(ஸ) , துத்தம் - ரிஷபம் (ரி), கைக்கிளை - காந்தாரம் (க), உழை - மத்தியம் (ம),
இளி - பஞ்சமம் (ப), விளரி - தைவதம் (த),
தாரம் - நிஷாதம் (நி)

126. **இசையின் ஏழு சுரங்களின் இயற்கையான விலங்கொலிகள் என்று கொள்ளப்படுபவை எவை?**
மயில் - ஸ, மாடு - ரி, ஆடு - க, புறா - ம, குயில் - ப, குதிரை - த, யானை - நி

127. **தனது நாணயத்தில் தமிழ் இலக்கங்களைக் கொண்டுள்ள நாடு எது?** மொறிசியஸ்

128. **இந்திய அரசால் தமிழ் மொழி 'செம்மொழி' என அங்கீகரிக்கப்பட்ட ஆண்டு எது?** 2004

**129. தமிழ் மொழி பேசப்படும் நாடுகள் சில எவை?**
இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா

**130. உலகில் மொத்தம் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன?**
2796 மொழிகள்

**131. கனடாவில் வாழும் தமிழர் தொகை அண்ணளவாக என்ன?**
300,000

**132. உலகில் வாழும் தமிழர் தொகை அண்ணளவாக என்ன?**
9 கோடி

**133. பறவைகளின் இளமைப் பெயர் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுபவை எவை?** பார்ப்பு, பிள்ளை

**134. நாய், பன்றி, புலி, முயல், சிங்கம் என்பவற்றின் இளமைப் பெயர் என்ன?** குருளை

**135. பாக்கு நீரிணையை முதலில் நீந்திக் கடந்த இலங்கையார் யார்?** ஆழிக்குமரன் ஆனந்தன்

**136. ஏட்டுச் சுவடிகளைத் தேடிப்பெற்று நூலுருவாக்கிய ஈழத்தவர் யார்?** சி. வை. தாமோதரம்பிள்ளை

**137. சங்கப் புலவர் பட்டியலில் இடம்பெறும் ஈழத்தவர் யார்?**
ஈழத்துப் பூதந்தேவனார்

**138. 'தமிழ்த் தாத்தா' என அழைக்கப்படுபவர் யார்?**
உ. வே. சாமிநாதையர்

**139. தமிழர் தற்காப்புக்கலைகளில் ஒன்றைத் தருக:**
சிலம்பாட்டம், மல்லாட்டம், களரி

**140. தமிழரின் வீரவிளையாட்டுக்களில் ஒன்றைத் தருக:**
ஏறு தழுவுதல் (சல்லிக்கட்டு)

**141. ஈழத்தமிழர் வரலாற்றில் 'கறுப்பு ஜூலை' எனப்படும் நிகழ்வு இடம்பெற்ற ஆண்டு எது?** 1983

**142. யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்ட ஆண்டு எது?**
1981

143. **முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் எந்த மாதத்தில் நடத்தப்டுகின்றன?** மே மாதத்தில்

144. **கனடா நாட்டின் எல்லைகள் எவை?**
ஆர்க்ரிக் சமுத்திரம், அற்லான்ரிக் சமுத்திரம், பசுபிக் சமுத்திரம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நான்குமாகும்.

145. **தை மாதத்தில் கொண்டாடப்படும் தமிழர் திருநாள் எது?**
தைப்பொங்கல்

146. **கனடாவில் 'தமிழ் மரபுத் திங்கள்' எந்த மாதத்தில் கொண்டாடப்படுகிறது?** தை மாதத்தில்

147. **தமிழ் மரபுத் திங்களை கனடா அரசு உத்தியோக பூர்வமாக எந்த ஆண்டில் ஏற்றுக்கொண்டது?** 2016

148. **போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த ஆண்டு எது?**
1505 ஆம் ஆண்டு

149. **ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்த ஆண்டு எது?**
1796 ஆம் ஆண்டு

150. **வன்னியை ஆண்ட இறுதி மன்னன் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்ட ஆண்டு எது?** 1803 ஆம் ஆண்டு

151. **பண்டாரவன்னியன் இறந்த ஆண்டு எது?**
1811 ஆம் ஆண்டு

152. **கண்டி இராச்சியம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?** 1815 ஆம் ஆண்டு

153. **ஆங்கிலேயர் இலங்கை இராச்சியங்களை ஒன்றிணைத்த ஆண்டு எது?** 1833 ஆம் ஆண்டு

154. **இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற ஆண்டு எது?** 1948 ஆம் ஆண்டு

155. **ஐக்கிய நாடுகள் அமையம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?**
1945 ஆம் ஆண்டு

156. **" The Manual of Vanni " என்ற நூலை எழுதிய ஆங்கிலேயர் யார்?** ஜே. பி. லூயிஸ்

157. **வன்னியின் ஒரு பகுதிக்கு 'அடங்காப்பற்று' என்னும் பெயர் வரக்காரணம் என்ன?** வன்னியர்கள் யாருக்கும் அடங்கி திறை செலுத்தாமையினால்

158. **யாழ் மாவட்டத்திலுள்ள மிக ஆழமான நீரூற்று எது?** நிலாவரை

159. **இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி யார்?** கோட்டாபாயா ராஜபக்ச

160. **இலங்கையின் தற்போதைய பிரதமர் யார்?** மகிந்த ராஜபக்ச

161. **தென்னிந்தியாவில் இறுதியாக ஆட்சிசெய்த அரசவம்சம் எது?** நாயக்க வம்சம்

162. **இந்தியாவின் தலைநகரம் எது?** நியூடெல்கி

163. **இந்தியாவினால் சந்திரனிற்கு ஏவப்பட்ட "சந்திராயன் 1" மற்றும் "சந்திராயன் 2" என்னும் விண்கலங்களை உருவாக்குவதில் தலைமை வகித்த தமிழ் விஞ்ஞானிகள் யாவர்?** மயில்சாமி அண்ணாத்துரை (சந்திராயன் 1, சந்திராயன்2), கே.சிவன் (சந்திராயன் 2)

164. **உலகின் சிறந்த கணித மேதையாக போற்றப்படும் சீனிவாச இராமானுஜனரின் பிறந்த நாள் இந்தியாவில் எவ்வாறு கொண்டாடப்படுகிறது?** தேசிய கணிததினம்

165. **இந்தியாவில் கீழடி அகழ்வாய்வின் மூலம் கண்டிறியப் பட்டவை என்ன?** ஏறக்குறைய கி.மு. 1000 ஆண்டுகளில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, கலாச்சாரம் சார்ந்த பல சான்றுகள்.

166. **பண்டைய தமிழர்களினால் பயன்படுத்தப்பட்ட அளவை முறைகள் எவை?** 7 அளவை முறைகள் : எண்ணல், நிறுத்தல், முகத்தல், பெய்தல், நீட்டல், தெறித்தல், சார்த்தல்

167. **தமிழர்கள் காலத்தைக் கணிக்கப் பயன்படுத்திய அளவை முறை என்ன?** தெறித்தல்அளவைமுறை

168. **தெறித்தல் அளவை முறையில் உள்ள ஒரு நொடி என்ற கால அளவீடு எவ்வளவு காலம்?**
இரண்டு கண்ணிமைப் பொழுது

169. **தெறித்தல் அளவையில் ஒரு நாள் எத்தனை பொழுதுகளாப் பிரிக்கப்பட்டுள்ளது?** 6 பிரிவுகள் : வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, இடைச்சாமம்

170. **தெறித்தல் அளவையில், ஒரு ஆண்டு எத்தனை காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?**
கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்

171. **தமிழில் சுருக்கெழுத்து முறையை உருவாக்கியவர் யார்?**
எம். சீனிவாசராவ்

172. **Computer என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?** கணினி

173. **Calculator என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?**
கணிப்பான்

174. **Grammar என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?**
இலக்கணம்

175. **Mother Tongue என்பதைத் தமிழில் எவ்வாறு வழங்குவர்?**
தாய்மொழி

176. **Cholera என்பதைத் தமிழில் எவ்வாறு வழங்குவர்?**
வாந்திபேதி

177. **Cough என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?** இருமல்

178. **Pomegranate என்பதற்குரிய தமிழ்ச் சொல் யாது?**
மாதுளம்பழம்

179. **Jasmine Flower என்பதற்குரிய தமிழ்ச் சொல் யாது?**
மல்லிகைப் பூ

180. **Spring என்பதற்குரிய தமிழ்ச் சொல் யாது?**
இளவேனிற்காலம்

181. **Solar Eclipse என்பதற்குரிய தமிழ்ச் சொல் யாது?**
சூரியகிரகணம்

182. **Lunar Eclipse என்பதற்குரிய தமிழ்ச் சொல் யாது?**
சந்திரகிரகணம்

183. **புற்றுநோய் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Cancer

184. **சுளுக்கு என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Sprain

185. **கோள்கள் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Planets

186. **கறுவா என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Cinnamon

187. **நெல் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Paddy

188. **பாதாம் பருப்பு என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?**
Almond

189. **இஞ்சி என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Ginger

190. **மாகாணம் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Province

**கையேடு - 7**

## தமிழ்த்திறன் போட்டியின் நோக்கம்:

கனடா தொல்காப்பிய மன்றத்தினால் நடத்தப்படும் இந்த மொழித்திறன் போட்டி மாணவர்களின் மொழி ஆற்றலையும், சொற்களஞ்சியத்தையும் பெருக்கும் நோக்குடன் நடத்தப்படுகிறது. வேற்று இனமக்கள் மத்தியிலே வேற்று மொழியிற் கல்வி பயிலும் எமது தமிழ்ச் சிறார் தமிழ் மொழியை விரும்பிப் படிப்பதற்கு இப்போட்டியிற் பெறும் அறிவு உதவும் என்று நம்புகிறோம்.

சிறுவர் தமது சூழலில் உள்ள பொருட்களின் தமிழ்ப் பெயர்களை அறியவும், சொல்லவும் இப்போட்டி உதவுமெனவும் எண்ணுகிறோம்.

சரியான முறையில் பெற்றோரதும், ஆசிரியர்களதும் ஒத்துழைப்புக் கிட்டும்போது எமது முயற்சி கடந்த ஆண்டுகளைப்போல் இவ்வாண்டும் வெற்றிகரமாக நடை-பெறுமென்று எதிர்பார்க்கிறோம்.

## 2020 பிரிவு 7 தமிழ்த்திறன் போட்டிக்கான விதிமுறைகள்:

2009இல் பிறந்தவர்கள் இப்போட்டியிற் பங்கேற்கலாம். இவர்களுக்கான போட்டி 3 நிலைகளில் நடைபெறும்.

1.பேச்சுப்போட்டி 2. பொது அறிவுப்போட்டி 3. வினாக்களுக்கு விடைதெரிதல்

**1. பேச்சுப் போட்டி - “தொல்காப்பியத்தின் பெருமை”**

பேச்சுப் போட்டிக்குரிய பேச்சு கையேட்டில் உள்ளது.

சிறுவர் கொடுக்கப்பட்டுள்ள பகுதியை மனனம் செய்து நடுவர்கள் முன்னிலையில் பேசவேண்டும்.

**2. படங்களுக்கான சொற்களைக் கூறுதல்:**

- இப்பிரிவினருக்கு 176 படங்கள் பெயர்களுடன் கொடுக்கப்படும். அவற்றிற் குறிப்பிட்ட சொற்கள் மட்டும் கேட்கப்படும்.
- சொற்களைத் தெரிவுசெய்யும்போது குலுக்கல் முறையில் சொற்கள் தெரிவு செய்யப்படும்.
- போட்டி முடிவைக் காண்பதில் சிக்கல் ஏற்பட்டால் மேலதிக வினாக்கள் கேட்கப்படும். முடிவு காண்பதில் சிக்கல் ஏற்படும் போது மேலதிக சொற்களின் புள்ளிகள் (bonus) கணக்கில் எடுக்கப்படும்
- படங்களுக்கான சொற்களைக் கூறுதல். மாணவர் பட்டறிவிற்கு உட்பட்டதாக மேலதிக வினாக்களும் கேட்கப்படும்.
- போட்டி நடைபெறும் நாள், இடம், நேரம் என்பன விண்ணப்பதாரிகளுக்குத் தனித்தனியே அறியத்தரப்படும். இணையத்தளம் ஊடாகவும் பார்க்கலாம்.

**3. கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து வட்டமிடுதல்.**

* பல்தேர்வு வினாவிடைகள் ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே வழங்கப்படும். போட்டியாளர் கொடுக்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு-செய்யவேண்டும். மேலதிக வினாக்களும் கொடுக்கப்படும். போட்டி முடிவைக் காண்பதில் சிக்கல் ஏற்பட்டால் மேலதிக வினாக்களின் புள்ளிகள் கணக்கில் எடுக்கப்படும்.

பிரிவு: 7 அகவைப் பிரிவு: 9

# தொல்காப்பியத்தின் பெருமை

வணக்கம்.

நீண்ட வரலாறும் பழைமையும் பெருமையும் கொண்டதே தமிழ்மொழி. இத்தமிழ் மொழியின் தொன்மைக்குச் சான்றாக விளங்குவது தொல்காப்பியமே. மூத்தமொழியாம் தமிழை இன்றுவரை காத்துவரும் நூலாக இருப்பதும் தொல்காப்பியமே. அத்தகைய சிறப்பிற்குரிய தொல்காப்பியத்தின் காலம் கி. மு. 7ஆம் நூற்றாண்டு என்று அறிஞர் கூறுகின்றனர். தொல்காப்பியம் முழுமையாக வளர்ச்சிபெற்ற தமிழ் மொழியின் இலக்கணத்தை எடுத்துக்காட்டும் பெருமைக்குரிய நூலாகும் என்று அறிஞர் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தமிழரின் வாழ்வியற் பெருமைகளையும், தமிழின் இலக்கணச் செழுமையையும், இலக்கியச் சிறப்பின் அழகினையும் எடுத்துரைப்பதே தொல்காப்பியமாகும். பண்டைத்தமிழர் எப்படி வாழ்ந்தனர், அவர்கள் கடைப்பிடித்த பழக்க வழக்கங்கள் என்ன என்பவற்றையும் இன்றுள்ளோர் அறிய உதவும் நூலாகவே தொல்காப்பியம் விளங்குகிறது.

எழுத்து, சொல், பொருள் என்று மூன்று அதிகாரங்களைக் கொண்டதே தொல்காப்பியம். இந்த மூன்று அதிகாரங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே ஒன்பது இயல்களைத் தம்மகத்தே கொண்ட 27 இயல்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. இவ்வாறு 1602 நூற்பாக்களில் தொல்காப்பியர் தமிழ்மொழியின் இலக்கணத்தைப் படிமுறையாகவும் தெளிவாகவும், அழகாகவும் கூறியுள்ளார்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தே வாழ்ந்த பழந்தமிழ் மக்களின் பண்பாட்டையும், விழுமியங்களையும் எடுத்துரைப்பதோடு தமிழ்மொழியின் இலக்கணத்தையும் எடுத்தியம்புகிறது. இதனால் தொல்காப்பியம் ஒரு முழுமைபெற்ற சமூக இலக்கியமாகவும் விளங்குகிறது என்றால் மிகையாகாது.

தமிழ்மொழி என்னென்ன கட்டமைப்பைக் கொண்டிருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி, அது தனது தனித்துவத்தை இன்றுவரை இழக்காது கட்டிக்காக்க வழிவகுத்துத் தந்தது தெல்காப்பியமே. ஆம்! பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்மொழியை தனது வரம்பிலிருந்து வழுவாது காத்து அதை வழிநடத்தியதும் தொல்கப்பியம் என்றால் மிகை யாகாது. இதை எழுத்ததிகாரத்திலும், சொல்லதிகாரத்திலும் நாம் கண்டுகொள்ளலாம்.

தமிழரின் வாழ்வியலைச் சித்தரிக்கும் தொல்காப்பியம் இலக்கிய நயம்மிக்க நூற் பாக்களைக் கொண்டது என்பது தமிழறிஞர் கருத்தாகும். இதற்கு அகத்திணை புறத்திணை என்று வகுக்கப்பட்டுப் பொருளதிகாரம் தரும் செய்திகளே சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இத்தகைய பெருமைக்குரிய தொல்காப்பியத்தைக் கற்றுத் தமிழின் அருமை பெருமை-களை உணர்ந்து அதை உலகறியச் செய்வோம். தொல்காப்பிய வழி தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம் என்று கூறி விடை-பெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.




தொல்காப்பிய மன்றம் – கனடா

# தமிழ்த்திறன் போட்டி
# பிரிவு 7
# 2009இல் பிறந்தோர்

Web: www.tolkappiyam.ca
Email: tolcanada@gmail.com
Tolkappiyam-Canada